உ

# நாவலர் குரல்

நாவலர் புகழ் பரப்பும் நல்ல தமிழ் ஏடு

குரல்: 1 ஒலி: 7 ஆடி, ஆவணி 1986 - 07 - 01 விலை: ரூபா 2 - 00

# நாவலர் சிலையை மீட்க எழுவோம்

**'சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா'** என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் புதிய பாரத வீரனை வரவேற்ருர். நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையை உடைத்துக் கடத்திய சிறுமையைக் கண்டு சைவத் தமிழ் உலகம் பொங்கியது, ஐந்தாம் குரவரின் திருப்படிமம் அகற்றியதைக் கண்டு சைவத் தமிழ் உலகம் ஒரே குரலில் கண்டணம் தெரிவித்தது. ஆறுமுக நாவலர் சபையைச் சார்ந்த சைவத் தமிழ்ப் பண்ராட்டுக் கொலைஞர்களாகிய சிலர் ஓரணியிலும் எஞ்சிய கழகங்கள், ம்ன்றங்கள், சபைகள் அனைத்தும் பொது மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டுள்ளனர்.

பொதுமக்கள் நிறுவிய சிலையைப் பொதுமக்கள் திரண்டு மீட்டுவருவது என்பது கடினமான செயலல்ல. மக்கள் சக்தியால் அதனை ஒரு கணத்தில் நிகழ்த்திக் காட்ட முடியும். ஆனல் இன்னசென அறியது இரும்பிழையை — இமாலயத்தவற்றை — ச் செய்த பட்டியிலிருந்து விலகிய இளமறிகள் தமது தவறை உணர்ந்து மனம் வருந்திச் சிலையை மீண்டும் நாவலர் பெருமான் உவந்து உறைந்த பூமியில் அமைந்த மணி மண்டபத்தில் கொண்டுவந்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையைச் சைவத் தமிழ் மக்கள் இன்னும் இழந்து விடவில்லை.

சிலையைக் கடத்தியவர்கள் உலக அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்காத பாவிகள். பண்பாட்டு உணர்வற்றவர்கள், பொதுமக்கள் அபிப்பிராயத்துக்கு மதிப்புக் கொடுக்காதவர்கள் என்ற முடிவுக்கு இதுவரை சைவத் தமிழ் மக்கள் வரவில்லை. ஆனல், சிலை கடத்தியவரை இனங்காணவும் அவர்களுக்குரிய சமூக நிலையை வரையறை செய்யவும் வேண்டிய கால கட்டம் வந்துகொண்டிருக்கிறது.

( 12 ஆம் பக்கம் பார்க்க )

## நாவலர் சைவத்தமிழ் பண்பாட்டு நிலையம் கல்வி வளர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாகும்

### யாழ். கல்விப் பணிப்பாளர் நம்பிக்கை

"ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் காக்க அயராது போரிட்டு, சைவத் தமிழ்ப் பண்பாட்டை நிலை நிறுத்தியவர் நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான். அவர்கள் ஈழத்திலும் தமிழகத்திலும் நிறுவிய சைவப் பிரகாச வித்தியாசாலைகள் கல்விக் கண்களாக ஒளிவீசியவை. நாவலர் பெருமான் வாழ்ந்து காட்டிய நெறியில் வாழ்ந்து, அறிவைப் பரப்பிய சைவத் தமிழ்ப் பேரறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. பண்டிதமணி அவர்கள் நினைவாக வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் அறிவு நாட்டமுள்ள அனைவரதும் கல்வி வளர்ச்சிக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும்" இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நாவலர் அறங்காவற்குழு சார்பில் செயற்படவுள்ள சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலைய ஆலோசனைக் குழுக் கூட்டத்துக்கு அவர் தலைமை தாங்கி உரையாற்றினர்.

யாழ். கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் பண்பாட்டு நிலையத்தின் பணிகளை விரிவாக விளக்கினர். இக்கழகம் தொடங்கி வைப்பதற்கு முன்னேடியாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் எழுச்சி விழா ஒன்றை நடத்துவது பொருத்தமாகும் என அவர் குறிப்பிட்டார். இவ்விழாவில் பொதுமக்களோடு மாணவர் பேராளர்களும் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என அவர் கருத்து வெளியிட்டார்.

**நல்லைமணி மண்டபம் நாவலர் சிலைக்கே**

# 'தென்னாடுடைய சிவனே போற்றி'

மாணிக்க வாசக சுவாமிகள் சித்தந் தெளிந்து சிவமானவர். 'சித்தமல மறுவித்துச் சிவமாக்கித்' தமையாண்ட அத்தன் பெருங்கருணைக்கே பரிந்து பரிந்துருகியவர். தம்மின் வேறாகாது நின்று தம்மை உருக்கிக் குழைவித்த சிவத்தின் பரத்துவ உண்மைகளை அவர் வெளியிட்டு வைத்த மணிவாசகத் தொடர்கள் திருவாசகத்திற் பலப்பல, அவற்றுள் மேலதும் ஒன்று.

இம் மணிவாசகத்தில் சிவனை அவர் உணர வைதத பாங்கினும் மஹத்தானது நாட்டை அவர் உணரவைத்திருக்கும் பாங்கு.

சிவனே சர்வலோக ஏகநாயகன் என்ற பொது நிலை உண்மையை அவர் மறைக்கவில்லை. 'எந்நாட்டவாக்கும் இறைவா போற்றி' என அதனை அவரே வெளிப்படுத்துகின்றார். ஆனால் அதனையும் முந்திக் கொணடு அவர் வாக்கில் வெளிவந்திருக்கின்றது இச் சிறப்புநிலை உண்மை.

நாடுகள் பலவேறிருப்பதும் உண்மைதான்: அவ்வந்நாட்டார் எல்லோரையும் அவரவரியல்புக் கேற்ற வணணம சிவன பரிபாலிப்பதும் உண்மைதான். அவ்வநநாடடார் தத்தம் கன்மா நுபவ நிலைக்கு அநுகுணமாம் வகையில் தமக்கு நிகழும் அறிவாசாரத் தரததுறகேற்ப பெயர் வேறுபட்ட சமயக் கோட்பாடுகளின் வழிநின்று பெயர் வேறுபட்டுக் குணங் குறிகளும வேறுபட்ட தெய்வங்களின் சார்பில் வழிபாடாறறி வருவதும் உண்மைதான், அவரவர் வழிபாடு அவரவர் ஆசாரத்திற் கேற்குமளவு உண்மை வழிபாடாம் பட்சத்தில் அவரவர் தெய்வங்களினிடமாக நின்று சிவன அவரவர்க்காக வேண்டும் பலனளிப்பதும் உண்மைதான். ஆனால்,

தன் நிலவளம் பொருள்வளம் அறிவுவளம் எல்லாம் ஒருசேரச் சிவன் பெயருக்கே அர்ப்பணித்துவிடட நாடு உலகில் எந்தநாடு? தனிப்பட்ட எவர் பெருக்கும் இல்லாத அளவு நிலப்பரப்புகளும் பொருட்குவியல்களும் சிவனுக்கே அர்ப்பணித்திருக்கும் நாடு உலகில் எந்தநாடு? இயற்கை ஏதுக்களால் எள்ளளவுஞ் சிதைக்கப்படாத வகையில் ஸ்திரமானவையும, சிற்பத் தொழில் நுட்பச் சிறப்புகளும் சித்திரவேலை வனப்புகளும் வாய்ந்து பலஏக்கர் நிலப் பரப்பை உள்ளடக்கிப் பிரமாண்டமான கூடங்கள் கோபுரங்களோடு பொலியும் இராமேஸ்வரம், சிதம்பரம், திருவாரூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவானைக்கா மதுரைக் கோயில்கள் போன்ற வற்றைச் சிவனுக்கென்றே ஆக்கி அர்ப்பணித்திருக்கும் நாடு உலகில் எந்தநாடு, அரசின் களஞ்சியத்தில் இருக்கக் கூடுமளவுக்குப் பல மடங்கு அதிகாரமான தங்கம், வெள்ளி. வைரம் முதலான அரும் பொருள்களைக் கோயில் மூர்த்திகள் ஆபரணங்கள், தண்டிகை, பல்லக்கு. தேர், வாகன விமான கவசங்கள் ஆகியவற்றின் பொருட்டு ஒதுக்கிபிருக்கும் நாடு உலகில் எந்த நாடு? கல்லைப் பிசைந்து கனியாக்கிய கதையாக, வன் மலைகளைக் குடைந்து 'திருசிராபுரம்' திருப்பரங்குன்றம் போன்ற சிற்பக் கோயில்களைச் சிவனுக்கென்றே செதுக்கி வைத்த நாடு எந்த நாடு? சித்தாந்த விளக்க ரீதியான ஆன்மீகப் பேற்றினை மக்கள் எய்துதற்குச் சாதனங்களாகும் வகையில் ஆலய நித்திய, நைமித்திகக் கிரியை வழிபாட்டு முறைகளைச் சிவ வழிபாட்டின் பேரில் அமைத்து வைத்திருக்கும் நாடு எந்த நாடு? வேத உண்மைகளைப் பொதுவாகவும் சிவாகம உண்மைகளைச் சிறப்பாகவும் கழுவி வேதாகம சைவ சித்தாந்த நிர்ணயம் பண்ணி வைத்த நாடு எந்த நாடு? அறிவறியாப் பாமரரும் தம் அனுபிநந்தவாற்றுக்கு அளவாகப்பாடி ஆத்மிகத் திருப்தியுறுவதற்கான அருட்பாடல்களைப் பல்லாயிரக் கணக்கிற் படைத்து வைத்த நாடு எந்த நாடு? காடு மேடுகளிற் கல்லெனக் கண்டதெல்லாம் காளியும், துர்க்கையும், கணபதியும், முருகனும், தாண்டவ மூர்த்தியும் தக்ஷிணாமூர்த்தியுமாகச் செதுக்கிச் சிவமஹிமை பேணி வைத்த நாடு உலகில் எந்த நாடு?

இந்த இந்த வகையிலெல்லாம் சிவனை ஏகபோகமாகத் தன்னுடைமையாக்கிக் கொண்டுள்ள நாடு தென்னாடு, இன்றைய நம் புறக்கண்ணிற் காட்சியளிக்கும் இத்தனையும் இன்னும் அதிகமானவையும் அன்றைய மாணிக்கவாசகரின் அகக்கண்ணுக்கு விருந்தாயிருந்திருக்கின்றன. சிவமஹிமையோடு நாட்டு மஹிமையும் சிவப்பற்றோடு தேசப்பற்றும் ஒருங்ககப்பட வெளிவந்திருக்கின்றது 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற மணிவாசகத் தொடர்.

நமது மற்றுந் சமயாசாரியர்கள் விஷயத்திற் போலவே தேசப்பற்றும், மொழிப்பற்றும், மாணிக்க வாசகரின் சிவப்பற்றில் அபின்னமானவை. சிவனைத் 'தென்னன்', தென்னன் பெருந்துறையான், தண் பாண்டி நாட்டான்' என்றும் பாண்டி நாட்டைத் 'தமிழளிக்குந் தண்பாண்டி நாடு' என்றும் தமிழைத் தண்ணார் தமிழ் தில்லைச்சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளும் உறைவான் உயர்மதிற் கூட லினாய்ந்த தண் தீந்தமிழ்' என்றும் பிறவாறும் அவர் போற்றியிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழராகிய நம்மவர்க்குத் தேசப்பற்றும் மொழிப்பற்றும் உள்ளவை தானே என்பது வேறு. இந்தத் தேசம் சிவனை உடைமையாகக் கொண்ட தேசம்; எங்கள் தமிழ் சிவம் பயிலுந் தமிழ் என்ற உணர்விலாம் தேசப் பற்றும், மொழிப் பற்றும் வேறு. இது தரத்திலும் தன்மையிலும் வேறு. இவ்வகைப்பற்றின் பிடிமானத்துக்கு மாணிக்கவாசகர் திருவாசகம் மலையிலக்காகும்.

**நாவலர் படிமம் மக்கள் சொத்து**

இந்திய மறுமலர்ச்சி இயக்கப் பின்னணியில் நாவலர் - 3

திரு. வி. சிவசாமி
தலைவர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# இராமகிருஷ்ண பரமஹம்சரும் நாவலரும்

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் (1836 - 1886) நாவலர் காலத்தில் வங்காளத்திலே வாழ்ந்த பெரிய இந்துஞானி. இவர் முறையான கல்வி பயின்றிலர். "இவர் எளிமையான மனிதர், கல்விமான் அல்லர், ஆனல் ஆழ்ந்த சமயப்பற்றுள்ளவர். எனினும் பரந்த நோக்குடையவர்." இவர் இயற்கையாகவே சமய ஈடுபாடும் ஆழ்ந்த மறைஞானமும் கொண்டவர். சாரதாதேவியினைத் திருமணம் செய்தவராயினும் அவரைத் தாம் வழிபடும் சக்தியாகவே கண்டார். சில காலமாகக் (1850 - 1867) காளிகோவில் அர்ச்சகராக விளங்கினர்.

இவர் உண்மையான ஞானத்தைத் தேடி உலகின் பிரதான சமய ஞானிகளை அணுகி அவரவர் சமய உண்மைகளை நேரடியாகவே உணர முயற்சித்தார். இந்து, இஸ்லாமிய, கிறித்தவ ஞானிகளை அணுகிச் சிலகாலம் அவர்களுடன் சழித்தார். அவர்களின் சமய அநுபவங்களை ஆய்ந்து உணர்ந்தார். இறுதியிலே, "எல்லா மதங்களும் ஒரே முடிவினைக் கொண்டவை, ஒரே சாராம்சத்தினை (பரம்பொருளை)க் கொண்டவை என்ற சமரச நோக்கினையுடையவரானர்.

இவர் ஆங்கிலம் பயிலாதவர், மேனுட்டுப் பண்பாட்டுத் தாக்கத்திற்குட்பட்டிலர், ஆத்மீக வாதத்தையே வற்புறுத்தி வந்தார். இந்தியாவின் மிகப் பழைமையான ஆத்மீக மரபிலே வந்த ஞானியர் வரிசையில் ஒருவராகவே திகழ்ந்தார். மத்தியகால வங்காளத்திலே விளங்கிய சைதன்யர் முதலிய ஞானிகளின் ஆத்மீக மரபையொட்டித் திகழ்ந்த இறைஞானியாகவே இவர் இலங்கினர். ரோய், தயானந்தர் போன்றோர் இந்து சமயத்தின் குறிப்பிட்ட பிரிவுகளையோ, அமிசங்களையோ தாம் சரியெனக் கருதியவாறு வற்புறுத்தினர். ஆனல் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளையும் அம்சங்களையும் ஏற்று, அவ்வவற்றிலுள்ள தாம் கண்ட நற்பண்புகளை இவர் மேம்படுத்தினர்.

இவரும் சமூக நலன் பேணியவர், ஒழுக்க ரீதியிலான கல்வியினை இவர் வற்புறுத்தினர். "மக்களுக்கான பணியே தெய்வம்" என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். இவரின் சமரச நோக்கினை, "இறைவனின் பெயர்கள் பல, அவனை அடைவதற்கான வழிகள் பல, ஒருவன் தான் விரும்பிய பெயரிலோ, வடிவிலோ அழைக்கும் போது அப்பெயரிலோ, வடிவிலோ இறைவனை அவன் காணுவான்" என வரும் பகுதியில் நன்கு அறியலாம். இக்கருத்தினை இவர் அன்றாட வாழ்க்கையிலே காணக்கூடிய உதாரணங்கள் மூலம் விளக்கியுள்ளார். இந்துமதப் புத்துயிர்ப்பிற்கு ஒழுக்க ரீதியிலான அங்கீகாரம், தத்துவ அடிப்படை, மிக உயர்ந்த இலட்சியம், ஆத்மீக முக்கியத்துவம் ஆகியவற்றை அளித்தார்.

19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலே கேணல் ஒல்கொற் என்பவரும், பிளவற்ஸ்கி அம்மையாரும் பிரமஞான சங்கத்தினை நிறுவினர். இச் சங்கம் வேறுபட்ட சமயங்களுக்கிடையிலுள்ள அடிப்படையிலான ஒற்றுமையினை வலியுறுத்தியது. சமரச நோக்கினை நன்கு வரவேற்றது. இதன் ஸ்தாபகர்கள் மேலைத் தேயத்தவராயினும் இந்திய சமய பண்பாட்டு மரபுகளிலே மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர்.

இந்தியாவிலே சமகாலத்திலே தோன்றிய சமய, சமூக, சீர்திருத்த இயக்கங்களைப் போலவே இதுவும் சமூக நலனைப் பேணிற்று. சமயப் பற்றினையும், கல்வியினையும் வற்புறுத்திற்று. இதன் தாக்கம் இந்தியாவிலே இந்து சமயத்திலும், இலங்கையிலே பௌத்தத்திலும் நன்கு ஏற்பட்டது. வேற்று நாட்டவர் நிறுவிய இச்சங்கம் இன்றும் தொடர்ந்து இந்தியப் பண்பாட்டினை வலியுறுத்தி வருவதும் குறிப்பிடற்பாலது. இச்சங்கத்தைச் சேர்ந்த அன்னிபெசென்ற் அம்மையாரின் இந்திய தேசியத் தொண்டுகள் குறிப்பிடற்பாலன.

சமகாலத் தென்னிந்தியாவிலே மேற்குறிப்பிட்ட முக்கியமான இயக்கங்கள் போன்றவை நிலவாவிடினும் இரண்டு குறிப்பிடற்பாலன. இவற்றுள்ளே மேற் குறிப்பிட்ட பிரமஞான சங்கம் ஒன்று. மற்றது நாவலரின் சமகாலத்தவரான இராமலிங்க சுவா

இந்திய மறுமலர்ச்சி இயக்கப் பின்னணியில் நாவலர்

(1—5—86 இதழின் தொடர்ச்சி)

இவரின் சில நடவடிக்கைகளையும் கருத்துக்களையும் சில வகைகளிலே நாவலர் பெருமானின் நடவடிக்கைகள் கருத்துக்களுடன் ஒப்பிட்டு நோக்கலாம் கிறித்தவர்களுடன் கொண்டிருந்த தொடர்புகள், கண்டனங்கள், தாய்மொழிக் கல்வி, ஆங்கிலக்கல்வி சமயத்தினைத் தாம் கருதிய வகையில் பேணுதல், அச்சு யந்திரம் நிறுவுதல் முதலியவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

(வளரும்)

நேயர் நெஞ்சம்

# நாவலர் பெருமானே மீள வருக

நாவலர் குரல் 1986 - 06 - 01 திகதி கொண்ட இதழில் ''யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் கோரிக்கை'' என விடுத்த அறிக்கையில் 6 ஆவது பந்தியும், 7 ஆவது பந்தியும் இதுவரை வெளிவராத சில பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய உண்மைகளைத் தெட்டத் தெளிவாக எடுத்து உரைத்துள்ளன. சம்மட்டியால் சிலையை உடைத்து அதனை எடுத்துக் கலாசாரமண்டபத் திருத்த வேலைகள் செய்யலாமே என்று ஒரு பாவி மகன் கூறுவான். அப்படிக்கூறும் பாவிக்குப் பரிசும் தரப்படலாம். தமிழ்க் கலாசாரம் எவ்வாறு பேணப்பட்டுவருகிறது என்பதற்கு எங்கள் கண் முன்னே தினமும் நடக்கின்ற அநர்த்தங்களும் அட்டூழியங்களும் போதுமான சாட்சியங்களாக அமைகின்றன. ஆகவே வேண்டாத இடத்தில் வேண்டப்பட வேண்டியதொன்று தொடர்ந்து இருப்பது தவிர்க்க முடியாத ஆபத்துக்குள் தள்ளப்பட நேரிட்டால் ஆச்சரியப்படுதற் கொன்றுமில்லை! அரியணையில் அமர்ந்த நாவலர் பெருமானை அயலார் எவரும் அறியாத வகையில் அகற்றிய, கறைபிடித்த அறியாமைமிக்கோர் செயல் கண்டு மனம் புழுங்கும் மக்களுடைய சாபம் இந்தச் சமூக விரோதச் செயல் செய்த கும்பலின் கண்ணைத் திறக்கும்.

நாவலர் பெருமானது நல்ல தொண்டுகளை நானிலமும் அறிய வேண்டுமென விரும்பி, இதனை எழுதியவரின் மனத்தில் தோன்றப் பெருமானது நூற்றாண்டாகிய 1969 ஆம் ஆண்டு கலாநிதி முன்ஷி அவர்களால் நடத்தப்பட்டு வெளிவரும் பிரபல்யம் வாய்ந்த சஞ்சிகையான ''பவான்ஸ் ஜேர்ண''லில் நாவலர் பெருமானுடைய படத்தையும் தாங்கி ஒரு கட்டுரை வெளிவந்தது. சஞ்சிகையுடன் தொடர்பு கொண்டவர்கள் இக்கட்டுரையை வாசித்திருப்பார்கள்.

இராமராச்சியத்தில் ஒரு கூனியும் தர்மராச்சியத்தில் ஒரு சகுனியும் சரித்திரம் படைக்க உதவினார்கள். இந்தக் கலியுகத்தில், ஐந்தாம் படைவீரர்

( 11 ஆம் பக்கம் பார்க்க )

மிகளின் சமரச சுத்த சன்மார்க்கம் இவருக்கும் நாவலருக்குமிடையிலே நடைபெற்ற 'அருட்பா - மருட்பா' விவாதங்களை விட்டு நோக்கும்போது இவரின் சமய சமூகக் கருத்துக்கள் சில சமகால வட இந்திய சீர்திருத்தங்களிலே காணப்பட்டவற்றுடன் ஒப்பிடற்பாலன. இவர் றோய், இராமகிருஷ்ணர் போன்று சமரசத்தினை வலியுறுத்தினர். இவருடைய சமரச சுத்த சன்மார்க்கம் மக்களிடையிலே சமூக நலன், ஒருமைப்பாடு, ஒழுக்கம், கல்வி முதலியவற்றை வலியுறுத்திற்று. சாதி முறையினை வலிமையாகக் கண்டித்தது. இவர் மக்களுக்கு மருத்துவ உதவியும் செய்துவந்தார். இவருடைய சமரச சுத்த சன்மார்க்கம் ஒருவகையில் இந்தியாவிலே குறிப்பாகத் தமிழகத்திலே தொன்று தொட்டு நிலவிய சமய சமரச நிலையின் தொடர்ச்சியாகவும் காணப்பட்டது. இதனை இவருக்கு முற்பட்ட காலத்தவராகிய தாயுமானவர் வலியுறுத்திய 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை'யுடனும் ஒப்பிடலாம். மேலும் இவருக்குச் சற்றுப் பின், மேலைத்தேய சமய சமரச வாதிகள் உருவாக்கிய பிரம்மஞான சங்கம் சமய சமரசம், ஆன்ம நேய ஒருமைப்பாடு பற்றிய கருத்துக்களை இந்தியாவிலேயே பரப்பும் என்பது பற்றி முன்கூட்டியே இவர் கூறியுள்ளார் என்ற கருத்துப் பிரமஞான சங்கத்தினர் மத்தியிலே நிலவியது. அதற்கும் இவரது சமரச சுத்த சன்மார்க்கத்துக்கும் இடையிலே குறிப்பிடத்தக்க ஒற்றுமையம்சங்கள் உள்ளன. பிரமஞான சங்க ஸ்தாபகர்களில் ஒருவரான பிளவற்ஸ்கி அம்மையார் அடிகளாரின் பெருமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வள்ளலார் 1867 இலே சமகாலப் பிரம சமாசத்தினருடன் உருவ வழிபாடு பற்றி விவாதம் செய்து வெற்றி பெற்றார்.

மேற்குறிப்பிட்ட இந்திய மறுமலர்ச்சி இயக்கங்கள் வலியுறுத்திய கருத்துக்களை நாவலர் கருத்துக்களுடன் ஒப்பிடுகையிலே வேற்றுமை, ஒற்றுமையம்சங்கள் இவற்றிடையிலே காணப்படுதலை அவதானிக்கலாம். இவ்வியக்கத் தலைவர்கள் அனைவரும் இந்து சமயத்தின் பழைமையிலும், சிறப்பிலும் ஈடுபாடு கொண்டவர்கள். தத்தம் மதிநுட்பத்திற்கேற்றவாறு இந்துசமயத்தினைச் சமகாலச் சூழ்நிலையிலே பெருமதிப்புள்ள கௌரவமுள்ள நிலைக்குக் கொண்டுவர முயற்சித்தனர். இவர்கள் யாவரும் மதமாற்றத்தினைப் பொதுவாக விரும்பிலர். தத்தம் நோக்கங்களுக்குக் கிறிஸ்தவர் கையாண்ட சில வழிமுறைகளையுமிவர்கள் பின்பற்றினர். கிறித்தவம் பரவாது தடுத்தலும் சீர்கேடுகளைக் களைத்தலுமிவர்களின் சில பிரதான நோக்கங்களாகும். அனைவரும் ஏதோ வகையில் சமூக நலன், கல்வி, பெண்கள் நலன் பேணுதல் முதலியவற்றை வற்புறுத்தினர். சமூக சமத்துவத்தினை றோய், தயானந்த சரஸ்வதி. இராமலிங்கர் போன்றோர் நன்கு வலியுறுத்தினர். பொதுப்பட நோக்கும்போது ஒவ்வொருவருக்கும் தனித்தனி சிறப்புக்களும் பொது அம்சங்களும் இருப்பினும் நாவலர் பெருமான் தயானந்த சரஸ்வதியுடனே தான் பெருமளவு ஒத்துக் காணப்படுகிறார் எனலாம்.

(நிறைந்தது)

**நாவலர் சிலையை மீட்பது நம்கடன்**

## நாவலர் பெருமான்: 3 - II

# கல்வி வேட்கையும் இளமை வாழ்க்கையும்

நாவலர் நுட்ப அறிவு கண்டு மகிழ்ந்தவர்களில் அவரது உறவினர் விசுவநாத முதலியார் என்பவரும் ஒருவர். யாழ்ப்பாணத்திலே நீதிபதியாக விளங்கிப் புகழ் கொண்டவர். அக்காலத்தில் தமிழறிந்தவர்களால் கோவில்களில் புராணங்கள் படிக்கப்பெறுவதுண்டு. கேட்டால் புண்ணியமுண்டு என்ற நோக்கத்தோடு வருபவரே பலராவர். புலமையைப் பற்றியோ கருத்துக்களைப் பற்றியோ கூர்ந்து நோக்குவார் மிக அரியர். அவ்வாறு புராணங்கள் நடைபெறுங் காலத்தில் நீதிபதியவர்கள் நாவலரையும் அழைத்துச் செல்வது வழக்கம். செல்லுகின்ற நாட்களில் கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூர்ப் புராணம், பெரிய புராணம் முதலியவற்றுள் ஒன்றைப் படித்து விளக்குவார்கள். அவர்கள் படிக்கின்ற போதும், விளக்கிக் கூறுகின்ற போதும் இரு செவியும் பயன்படுமாறு உற்றுக் கேட்பர். கேட்ட பின்னர் பாடலிற் காணும் பிழைகள், கருத்து மாறுபாடுகள் முதலியவற்றை எடுத்துக் காட்டி யாவரும் ஒப்புமாறு செய்வர். பன்னீராண்டும் நிரம்பப் பெருத நாவலர் ஆயிரக்கணக்கான கதைகளையும் பாடல்களையும் சித்தாந்த உண்மைகளையும் கொண்ட நூல்களைக் கேட்ட மாத்திரத்தே பிழை கண்டு மெய்ப்பித்துக் காட்டும் பெற்றி கண்டு வியவாதார் யாரே? அவரை அற்புதப் பிறவி என்று யாவரும் வணங்க முற்பட்டமைக்கு இதனினும் சான்று வேண்டுங்கொல்?

இவ்வற்புத நிகழ்ச்சியைத் தமையன் முதலாயினோர் கேட்டு உவகையுற்றனர். ‘இவருடன் பிறத்தற்கு என்ன மாதவம் செய்தோம்!’ என எண்ணி எண்ணி உருகினர்; தமிழைக் கற்கச் செய்ததோடு நில்லாமல் நாவலரை ஆங்கிலமும் கற்கச் செய்யும் விருப்புக் கொண்டனர். இந்த உலகிலே திறமையுள்ளவர் ஆதரிப்பாரில்லாமல் எத்தனையோ பேர் மண்ணோடு மண்ணாய்ப் புதையுண்டனர். தங்கள் திறமையை உலகிற்கு உதவும் வாய்ப்பில்லாது உயிர் துறந்து கல்லறையிலே அடங்கியோர் எத்தனை பேர்? அந்த நிலையை நம் நாவலருக்கு அளிக்காத தமிழினத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நாவலர் திறமையை அறிந்த அவர் உடன் பிறந்தோர் அவர் திறமையை வளர்க்கப் பேருதவி புரிந்தனர். அந்நாளில் பார்சிவல் துரை நடத்தி வந்த பள்ளியில் ஆங்கிலம் கற்க உய்த்தனர். நாவலர் கருத்தூன்றிக் கற்று மேல் வகுப்பை அடைந்தார். இவர் திறமையைக் கண்ட துரை மகனுர் மிகவும் பாராட்டினர். இவருக்குத் தமிழ்ப் புலமை மிக்கிருப்பதை அறிந்து தாமும் பயன்படுத்திக்கொள்ள நினைத்தார். ஆகவே பள்ளியில் மாணவராக இருந்த நாவலரைக் கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும் மேல் வகுப்புகளுக்குத் தமிழும் பயிற்றுவிக்கும் ஆசிரியராக அமைத்தார். இதனுல் நாவலருக்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிவு பெற ஒரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது. பதின் மூன்று வயதே நிரம்பிய இவர் போன்ருர் மாணவ ஆசிரியராக விளங்கினர் எவரையேனும் கேட்டதுண்டோ? ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்ட துரைமகனுர் ஒருவர் தம்மினும் வேருகிய மொழியையும் சமயத்தையும் கொண்ட நாவலரைப் பாராட்டியது அற்புதமன்ருே? இப்படிப்பட்ட அற்புத நிகழ்ச்சிகள் பல அவர் வாழ்விலே நிகழ்ந்துள்ளன. அவர் அறிஞர்களாலும் தொழத்தக்க விழுமியராகியதும் அந்நிகழ்ச்சிகளாலே யாம்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நாவலர் பெருமான்: 3 - I

(சென்ற இதழ் 4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டேயிருப்பர். ஆசிரியர் கற்பிக்கும் நீண்ட பாடல்களையும் படிக்கின்ற போதே இலக்கணப்பிழை முதலிய கண்டு சொல்லும் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றிருந்தார். அக்காலத்தில் மாணவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஏடு இராது. ஏட்டினை இரவல் பெற்றே எழுதிப் படிக்கும் காலம். நாவலர் இலக்கண இலக்கியங்கள் சிலவும், தனிப்பாடல்கள் சிலவும் கற்றுக் கொள்ள முடிந்தது. ஆசிரியர் ஒரே தடவை படிக்கும் பாடலைக் கேட்டுப் பொருளுணர்ந்து திருத்தம் கூறும் ஆற்றலுமிருக்குமாயின் அவர் அறிவை என்னென்று புகழ்வது? ஆசிரியர்களும் ஏனைய மாணவர்களும் தனி மதிப்புத் தராதிருப்பரோ? இடைக்காலத்திலே ஏடாயிரங்கோடி எழுதாது தம் மனத்து எழுதிப் படித்த அந்தகக் கவி வீரராகவ முதலியாரும் இத்தகு கூர்த்த அறிவுடையாரே. ஆங்கில ஆட்சிக் காலமாகிய பத்தொன்பதாம் நூற்ருண்டிலே சென்னை உயர் நீதி மன்றத் தலைவராயிருந்து அழியாப் புகழ் எய்திய சர். முத்துச்சாமி ஐயர் என்பார் தாம் கல்வி பயிலும் இளமைக் காலத்தில் ஆசிரியர் கற்பிக்காத நூல்களையும் பாடங்களையும் தாமே கற்று நினைவாற்றலிற் சிறந்தவராய்த் திகழ்ந்தனர் என்பதும் அறிந்து உளங்கொளத் தக்கது. இதனுல் பெறப்படுவதோர் உண்மை யாது? நூருண்டுகட்கு ஒரு முறையேனும் வியத்தகு பேரறிஞர் தோன்றி வழிகாட்டுவர் என்பதன்ருே?

(நாவலர் பெருமான்: 3 – II பார்க்க)

**சிலையை மீட்போம் சீர்பெற நிற்போம்**

# இந்த எண்பத்தைந்துகளில் சைவத் தமிழர் இருந்தார்கள் என்பது ஸ்தாபிதமாக வேண்டும்

## முழக்கம்

தத்தம் சமயத்தின் பாரம்பரியமான பண்பாட்டைப் பேணிக் காக்கும் பணியை அவ்வச் சமயத்தவர் அத்தியாவசிய சேவையாக மேற்கொள்ள வேண்டுவது அவரவர் தலைக்கடனாகும். பண்பாட்டழிவைப் பராமுகஞ் செய்யுமளவிற் பண்ணிழந்த யாழிசை போற் சமயம் பரிகசிப்புக்கிடமாகும். அப்பராமுகம் மேலும் மேலும் பண்பாட்டழிவுகள் முளை கொள்வதற்குப் பதஞ் செய்து கொடுப்பதுமாகும்.

காலாகாலத்தில் சமயத்திற் பண்பாட்டுப் படுகொலைகள் அத்துமீறல்கள் அதிக்கிரமிப்புகள் அவமதிப்புகள் நேர்வதும் அவ்வப்போதுள்ள ஊற்றம் மிக்க சமயிகள் உண்மை உணர்ச்சிக்கு முக்கியத்துவங் கொடுத்து ஒருப்பட்டெழுந்து உண்மைப் பண்பாடு நிலவ வைத்தலுஞ் சரித்திரமறிந்த செய்திகள்.

ஒரு தடவை, அச்சிட்டுப் புத்தகமாய் விட்ட ஒரு லட்சம் 'ஒக்ஸ்போட் இங்கிலிஷ் டிக்‌ஷனறி'கள் விற்பனைக்கு வராமலே அழித்தொழிக்கப்பட்ட செய்தி உலகமறியும். அனைத்துலக இஸ்லாமியர்களும் ஏகோபித்தெழுப்பிய எதிர்ப்புக் குரலின் எதிரொலி அதுவாதல் அறியத்தகும். இஸ்லாமியரின் அதியுயர் மதிப்புக்குரிய முகமது நபியின் பாரியாரை அந்த 'டிக்‌ஷனறி' She என்ற சாமானிய சுட்டுப்பெயராற் சுட்டியமையே இஸ்லாமியரின் கிளர்ச்சிக்குக் காரணம் ஆதல் கவனிக்கத்தகும். உண்மை உணர்ச்சி வழிநின்று அன்றைய இஸ்லாமிய சமுகம் விளைத்த வீரத்தின் முக்கியமான பெறுபேறு. அக்காலகட்டத்தில் இஸ்லாமியர் இருந்தார்கள் அதனால் இஸ்லாமியப் பண்பாடு, தலை தப்பிற்று என்ற உண்மை ஸ்தாபிதமாய் விட்ட ஒன்றேயாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஈடிணையற்ற சைவ காவலர். ஈழத்துச் சைவப் பண்பாட்டை ஊதியெறிய வந்த கிறீஸ்தவப் புயலை அப்படியே ஆசமனம் பண்ணி விட்ட ஆதசேஷன். அருமையிற் பெருமையில் அகிலமும் ஒப்புக் கொண்ட ஐந்தாங்குரவர். அவர்க்கமைந்த திருவுருவச் சிலை சந்தியில் தெருவில் பூங்காக்களில் நாம் காணும் மற்றும் மற்றுஞ் சிலைகள் போற் காட்சிப் பொருளன்று. திரிபுண்டரமுங் கண்டிகையும் தியான பாவமும் திருக்கை நிறைந்த கந்தபுராணப் புத்தகச் சுவடியும் பொருந்திய வழிபாட்டுப் பொருள் அதுவாகும். தொடர்ந்து பதினெண்டுகள் (69 ஆனி-85 ஆவணி) அது சைவச் சிறுவர் சிறுமியர்; நம்பியர் நங்கையர்; பாமரர் பண்டிதர்; இளையோர் முதியோர் அனைவரினதும் வழிபடு பொருளாகவேயிருந்த சீர்மை அந்நாளில் நல்லூரரான் தென்வீதி மணிமண்டபப் பக்கம் தற்செயலாய்த் தலைகாட்ட நேர்ந்த சைவரல்லாதாருந் தாராளமாகக் கண்டநுபவித்த காரியம்.

சந்தி தெருக்களில் தாபனம் பெற்றுள்ள சமுக அரசியற் சின்னங்களான மற்றுஞ் சிலை எதனையுமே இரவோடிரவாக எழுந்த மானத்துக்கு உடைத்தெடுத்துக் கடத்திய செய்தி எந்த நாட்டுச் சரித்திரத்திலேனுமில்லை. வெயில் வெதுப்பல்: மழை அபிஷேகித்தல், குருவிகள் கோலமிடல் போன்ற எத்தனையோ விக்கினங்களுக்கிடையிலும், வைத்த சிலையை வைத்த இடத்தில் இருக்க வைக்குமளவில் அதற்கொரு தனிக் கௌரவம் அளிக்கப்படுகிறது. அக் கௌரவத்துக்குக் குந்தகம் பண்ணுநிருப்பது பண்பாடு. அகில உலகரீதியில் தழுவப்பட்டு வரும் ஆசாரம் அது.

அது அங்ஙனமாக, சமுக சின்னமோ, அரசியற் சின்னமோ அல்லாது, சைவ சின்னம் என்ற மட்டிலுமல்லாது, சைவ வழிபாட்டு மூர்த்தமாக, அதுவும் சந்தியிலல்லத் தெருவிலல்ல, தனக்கென்றமைந்த தனிமணிமண்டபத்தில், அமர்ந்திருந்த சிலையை அலவாங்கிட்டுப் பெயர்த்ததற் கென்ன பெயர்? கடகட வண்டியிலேற்றிப் படபடப்புடன் கடத்தயதற்கென்ன பெயர்? இவற்றுக்குத் தான் பெயர் பண்பாட்டுப் படுகொலை, ஆக்கிரமிப்பு, அதிக்கிரமிப்பு, அவமதிப்பு. நயினை, செல்வச் சந்நிதி போன்ற இடங்களில் நிகழ்ந்த கோயில் தகர்ப்பு, தேர் எரிப்பு, அசையாமணி உடைப்புகளுக்குப் பெயர் பண்பாட்டுக் கொலையெனில் இதற்கும் பெயர் அதுவே தான்.

மாபெரும பண்பாட்டழிவான இதில் சிலர் தலையிட்டது பாதகமென்றால், நம்மவர் அதை முன்னறிந்து தடுக்காதொழிந்தது மஹா பாதகம். அது அப்படி என்றால் நடந்து முடிந்து மாசங்கள் பத்தாகியும் அதற்குப் பரிஹாரங் காணப்படாதிருப்பது அதி மஹா பாதகம் ஆகும்.

பாதகஞ் செய்பவன் பாதகன் என்றால் அதைக் கண்டும் தடுக்காதிருப்பவன் மஹாபாதகன்; பின்னும் அதற்கேற்ற பரிகாரம் பண்ணுநிருப்பவன் அதி மஹா பாதகன் என்ற இக் கருத்து நாவலர் அறிவின் வழிவழிச் சிந்தனையாதல் அறியத்தகும்.

நாமுள்ள வரை, நாவலர் பால் நமக்கு நன்மதிப்புள்ள வரை இச் சிந்தனைக்கு முக்கியத்துவங்

(7 ஆம பக்கம் பார்க்க)

## படிமம் கடத்தல் பண்பாட்டுப் படுகொலை

# கல்வி வேட்கையும் இளமை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருமொழியும் கற்றுத் துறைபோகிய நாவலரவர்கள் பார்சிவல் துரைக்குத் தமிழாசிரியரானார்: அத்துரை மகனார் கிறிஸ்தவ மறையாகிய விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வந்தார். அப்பணிக்குத் துணை புரியும் தகுதியுடைய தமிழ்ப் புலவர் நாவலர் ஒருவரே எனத் தேர்ந்து சேர்த்துக்கொண்டார். நாவலரும் பலரால் எழுதிய விவிலிய நூல் உரைகளையெல்லாம் ஆழ்ந்து பயின்றார். கிறிஸ்தவ சமயக் கொள்கைகளையும் நன்கு அறிந்து மனத்திலே மறவாது அமைத்துக்கொண்டார். மொழிபெயர்ப்பில் இனிய எளிய தமிழ் நடையைக் கருத்துக்கள் மாறுபடாதவாறு அமைத்துதவினார், சொல்லும் பொருளும் சுவைபட விளங்குவதற்கு நாவலர் துணையே காரணம் என்பதைத் துரைமகனார் அறிந்து அகமிக மகிழ்ந்தார். எனினும் அதேசமயத்தில் சென்னையிலுள்ள கிறிஸ்து சபையாரும் கிறிஸ்தவ மறையை மொழிபெயர்க்க ஏற்பாடு செய்திருந்தனர். இதனால் பார்சிவல் துரை, தம் மொழிபெயர்ப்புச் சென்னையிலுள்ள சபையாரால் ஏற்றுக்கொள்ளப்படுமோ என்ற ஐயமும் அச்சமும் கொண்டார். நாவலரையும் அழைத்துக்கொண்டு சென்னை அடைந்தார். சென்னையிலுள்ள சபையார் மொழிபெயர்ப்பே சிறந்தது எனச் சென்னையிலுள்ளோர் ஓர வழக்காடினர். ஆகையால் சபையார் அந்தக் காலத்தில் தமிழ்ப் புலமை மிகுந்து விளங்கிய வித்துவான் மகாலிங்க ஐயரை நடுநிலையாளராகத் தேர்ந்து, இரு மொழிபெயர்ப்புகளையும் ஒப்படைத்தனர். சென்னையில் பிறந்து வாழ்பவராயிருந்த ஐயரவர்கள் புலமை பொன்னறையே அளவுகோலாக வைத்து ஆராய்ந்து பார்த்துத் துரைமகனார் மொழிபெயர்ப்பையே சிறந்தது என்று தீர்ப்பளித்தார். காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்வது அறிவுடைப் பெருமக்கள் செயலன்றோ?. அன்று முதல் பார்சிவல் துரை நாவலர்பால் முன்னையிலும் பன்மடங்கு ஈடுபாடும் மதிப்பும் உடையவரானார்: சென்னையில் நிகழும் கூட்டங்களில் நாவலரவரின் அத்துரைமகனார் மதித்து வரவேற்பர் என்பர், இந்த மொழிபெயர்ப்பைப் படித்த வித்துவான் மகாலிங்க ஐயரவர்கள் "யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உளதோ" என்று கூறி மகிழ்வெய்தினராம். இளமையில் செய்த முதல் முயற்சியே நாவலருக்குப் புகழைத் தந்து, சென்னையில் வாழ்ந்த பல தமிழ்ப் புலவர்களின் நட்பைப் பெறும் பேற்றையும் ஈந்தது. சென்னையினின்றும் தாயகமான யாழ்ப்பாணம் போந்தார். ஆங்கிலத்தைத் தமிழாக்கலும் தமிழை ஆங்கிலத்திற்கு ஏற்றலும் ஆகிய பணியில் இவருக்கு இணையாவார் எவருமில்லை என்ற புகழ் யாழ்ப்பாணம் எங்கும் பரவியது, நாவலர் தம் சமயப் பற்றில் எள்ளளவும் குறையாது அம்மொழிபெயர்ப்பில் ஈடுபட்டு வந்ததும் அவர்தம் பேராற்றலேயன்றோ?

பார்சிவல் துரைமகனாரின் சமயத் தொண்டு நாவலரையும் தொண்டுணர்ச்சி பெறத் தூண்டிற்று. அவ்வுணர்ச்சியால் உந்தப் பெற்ற அவர் சித்தாந்த சாத்திரங்களை விரைந்து கற்க விழைந்தார். ஆசிரியர்கள் துணையின்றியே அனைத்தையும் நுணுகிப் படித்து முடித்தார் என அறிகின்றோம். இன்றும் எத்தனையோ அறிஞர்கள் சித்தாந்த சாத்திரங்களனைத்தையும் கற்றிருக்கின்றார்கள். ஐயந்திரிபின்றிக் கற்றவர் விரல் விட்டு எண்ணத் தகும் சிலரே. அவர்களும் நல்லாசிரியர் பலரின் துணை நாடி ஆண்டுக் கணக்காகப் பாடம் கேட்டவரேயாவர். அவரும் சித்தாந்த சாத்திரங்களை மட்டுமே கற்றவராயிருப்பர். அல்லாவிட்டால், இலக்கண இலக்கியங்களை மட்டுமே கற்ற புலவராயிருப்பர். ஆனால் நம் நாவலரவர்களோ எந்த ஆசிரியரையும் நாடாது சில தினங்களில் தாமே கற்றுப் புலமை எய்தினார் என்றறிகிறோம்.. இலக்கண இலக்கியங்களும் சித்தாந்த சாத்திரங்களும் கற்ற அவர் அவற்றோடு அமைந்தாரா? இறைவனால் அருளிச் செய்யப்பட்ட ஆகமங்களையும் கற்க விழைந்தார். அவ்வாகமங்களுள் வேதம் பொதுநூலாகவும் சிவாகமம் சிறப்பு நூலாகவும விளங்குதலை அறிந்தார். சிவசமயம் ஒன்றிற்கேயுரிய சிவாகமத்தைப் படிப்பதற்குரிய முயற்சியில் ஈடுபட்டார். அவ்வாகமத்தைப் பயில்வதற்கு வடமொழிப் புலமை இன்றியமையாது வேண்டுவதாயிற்று. ஆகவே வடமொழி நூல்களைப் பிறருதவியின்றிப் படித்து வருவராயினர். இயற்கை அறிவு சிறக்கப்பெற்ற அவருக்கு வடமொழிப் புலமையும் தானே அமைவதாயிற்று. அவர் வடமொழியைத் தானே கற்றதற்கு ஒரு காரணம் உண்டு. இந்தக் காலத்தைப் போன்று எவரும் எம்மொழியையும் விரும்பினால் கற்க முடியும் என்ற உரிமை அக்காலத்தில் இல்லை. ஒருவர் பயில விரும்பினும் பயிற்றுவிக்கும் ஆசிரியர் விரும்பவில்லையானால் அவ்விருப்பம் நிறைவுறாது. இடைக்காலத்தே வாழ்ந்த வடமொழி தென்மொழிக் கடல்களை நிலை கண்டுணர்ந்த மாதவச்

(மறு பக்கம் பார்க்க)

## முழக்கம் (6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துத் தொழிற்பட வேண்டியது ஈழத்துச் சைவராகிய நம் கடனாகும். இதைக் கடைப்பிடித்தல் மூலம் விளையலாகும் பெரு நன்மைகள் இருவகையின. இன்னினிமேல் இத்தகைய பண்பாட்டழிவில் தலையிடுவதற்கு எவனொருவனும் அஞ்சியொதுங்கும் நிலையை ஆக்குதல் ஒன்று. இந்த எண்பத்தைந்துகளில் ஈழத்திற் சைவர் இருந்தனர்; அதனால் சைவப் பண்பாடு தலைதப்பிற்று என்ற புகழை ஸ்தாபித்தல் ஒன்று. இவை நேராதவரை இத் தசாப்தத்தில் ஈழத்திற் சைவரென்று நம்மவர் இத்தனை பேரும் இருந்ததற் கத்தாட்சி இல்லையே இல்லை.

**படிமம் மீட்டுப் பண்பாடு காப்போம்**

## கேட்கிறார்கள்- சொல்லுகிறோம்

# கடத்தப்பட்ட நாவலர்பெருமான் சிலை மீளுமா?

மீளாதென்பதற்கில்லை. நாமறிய இந்நாளில் எத்தனையோ விதமான கடத்தல்கள் நிகழ்கின்றன. கடத்தலுக்குள்ளானவை எல்லாரும் அதிசயிக்கத்தக்க வகையில் மீள்கின்றன. தெல்லிப்பளை துர்க்கா பரமேஸ்வரியின் திருவாபரணங்கள் ஒருநாட் கடத்தப்பட்டவை மற்றொருநாள் மீண்டிருக்கின்றன. எத்தனை எத்தனையோ வண்டி வாகனங்கள் ஒருகால் கடத்தப்பட்டவை திரும்ப மீண்டிருக்கின்றன. தனிப்பட்டவர் பேரிலும் இப்படி எத்தனையோ நிகழ்ந்திருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமானுன நாவலர் சிலைக்கு மட்டும் அது விலக்காவதெப்படி? அது நிச்சயம் மீண்டேயாகும். சந்தேகமில்லை.

அதுக்கென்ன நாவலர் சிலை இங்கையிருந்தாலென்ன? அங்கையிருந்தாலென்ன என்கிறார்கள் ஒரு சிலர். இவர்களுக்கென்ன பதில்?

பதிலா இல்லை. தயவுசெய்து அந்த ஒருசிலரை ஒருகால் கேளுங்கள். தற்செயலாக உங்கள் விஷயத்தில் அப்படி நடந்து நீங்கள் அநாதரவான ஒரு இடத்தில் விடப்பட்டுவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்நிலையில் அதுக்கென்ன அவர் அங்கிருந்தாலென்ன இங்கிருந்தாலென்ன என்று சொல்லி உங்கள் பெண்டுபிள்ளைகள் திருப்தியடைவார்களா? பெற்றோர் உற்றோர் அப்படித் திருப்தியடைவார்களா? உங்கள் ஆப்தர்கள் அப்படித்தான் சொல்லித் திருப்திப்படுவார்களா? இல்லை. நீங்கள் தானும் அதுக்கென்ன நான் அங்கையிருந்தாலென்ன இங்கையிருந்தாலென்ன என்று விடுவீர்களா?

## கல்வி வேட்கையும் இளமை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞான அடிகளார் இளமை வரலாற்றின் நிகழ்ச்சியினை யீண்டு அறிய வேண்டுவதேயாம். பிறவியிலேயே மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றவர் சிவஞான முனிவர். அவர் திருவாவடுதுறை யாதீனத்திலே தமிழ்க் குன்றாக வீற்றிருந்தார். வடமொழி படித்துணர வேண்டுமெனும் அவா மிக்கிருந்தது. தொண்டை நாட்டு வள்ளல் மணலிசின்னையா முதலியாரிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். முதலியாரவர்கள் முனிவர் தம் அவாவினைத் தாம் அறிந்த வடமொழிவாணர்களிடம் அறிவித்தார். அவர்கள் கற்பிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்லவியலாதவர்களாய் ஏதோ காரணங்களைக் கூறினர். முதலியாரவர்கள் முனிவரின் அவாவினை மேலும் வற்புறுத்தித் சிருவருள் குறிப்பித்தால் தாங்கள் கற்பிக்கலாமன்றோ என வினவினர். திருவருட் குறிப்பு என்றதும் மறுக்கவியலாது இசைநதனர். அவ்வடமொழி வாணர்கள் விருப்பின்படி ஒரு குடத்தில் நூற்றொரு சீட்டு எழுதி இட்டனர். 'கற்பித்தல் கூடாது' என்று நூறு சீட்டும், 'கற்பித்தல் கூடும்' என்று ஒரு சீட்டும் எழுதியிருந்தனர். குடத்தினைக் குலுக்கித் திருவுளச் சீட்டை எடுத்தனர். 'கற்பித்தல் கூடும்' என்ற ஒரே சீட்டு வந்தது, வடமொழியைப் பெரும்பாலான மக்கள் பயிலாமைக்கும், உலக வழக்கு இழந்தமைக்கும் இதுவும் ஒரு காரணமாகும். பிறிதொரு காரணமும் உண்டென்பர். வேதாகமங்களைப் பெரிதும் போற்றி ஒழுகுபவர் வடபுலத்தினர். சிவாகமங்களைப் பெரிதும் போற்றியொழுகுபவர் தென்புலத்தினர். தென்புலத்தவர் சித்தாந்த சாஸ்திரங்களுடன் சிவாகமங்களும் கற்றுவிட்டால் சிவநெறியினையே மக்கள் போற்றுவர். பிறநெறி குன்றுதற்கேதுவாகும் என்பதுவுமாம். இதனை நாவலரவர்கள் நன்குணர்ந்தே சிறப்புத் தன்மையுடைய சிவாகமங்களைப் பயிலப் போந்தனர். சிவாகமங்களின் தெளிந்த சாரமே நால்வர் அருளிய தேவார, திருவாசகங்கள் என்பதை உணர்ந்தார். அவற்றின் செழும் பாடல்களையும் அன்போடுருகி அகங்குழைந்து பயில்வாராயினர். அஞ்சல் என்றருள் செய்யும் ஆண்டவனைப் போற்றி வழிபட வேதத்தினும் சிறந்தது சிவாககமே என்ற கருத்துடையவர் நாவலர். இக்கருத்து சிவநேசச் செல்வர் சிவப்பிரகாச அடிகளாருக்கும் உரியது. திருவாசகத் தேனினை மாந்தித் தம்மையும் மறந்து பாராட்டும் பாடலில்,

''வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண் கிலேம்
திருவாசகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பராகுந ரன்றி
மனபதை யுலகின் மற்றைய ரிலரே''

என வரும் அடிகளே சான்றாகும், ''தமிழ்ப் பாட்டுக்குருகும் சொக்கநாதன்'' என்ற பொருள் பொதிந்த சொற்றொடரும் ஈண்டு நினைந்து இன்புறத் தக்கதாகும்,

இவ்வாறு மும்மொழிப் புலமையும் செம்மையாகப் பெற்று யாவரும் வியக்கும் வண்ணம் நாவலர் சிறப்படைந்தார். தம்பால் வருவாரிடத்துப் பன்னூற் கருத்துக்களையும் அள்ளி அள்ளி வீசி முப்பொருளுண்மையைச் செப்பமுறக் காட்டுவர். கேட்டார் மயிர் சிலிர்த்து, ''இவரே நம் ஐந்தாங் குரவர்'' என அடிபணிந்து ஏத்துவர். அவரைக் கண்டாலே இம்மைப் பிறப்பின் பயன் என எண்ணினர். தமக்குத் தெரியாதென்று பிறரிடம் சென்று ஒன்றையுங் கேட்டறியாத நாவலர் பால் எண்ணிறந்த புலவர்கள் வந்து தங்கள் ஐயம் நீங்கித் தெளிவு பெற்றனர். இளைஞராயிருந்த போதே இந்தியாவிலும் இவருடைய பெருமை நிலவிற்றெனில் இவரை, ஐந்தாங் குரவர், என்று புகழ்தலில் தவறுமுளதோ? (வளரும்)

**நாவலர் படிமம் மீட்க எழுவோம்**

# சிவாலய பூஜையில் தமிழ் வேதம்

( முந்திய இதழ்த் தொடர்ச்சி )

இனி. ஆசீர்வாத வசனங்களில் ஒன்றிலேயே தமிழ் வேத பாராயணம் இவ்விடத்து அமைதல் வேண்டும் என்றிருக்கும் இயல்பையுங் கவனிக்கலாம்.

"வேதாத்யயன த்ராவிட வேத பாராயண
நிருத்த கீத வாத்ய ப்ரதக்ஷிண நமஸ்கார
ஆசீர்வாத பஸ்மப்ரதான ஜபநைவேத்ய
உபசாராந்தம்,
உபசார பரம்பரா சித்திர் பூயாத் இதி
மஹாந்தோ Sனுக்ரு ஹ்ணந்து"

— அகோர சிவாசாரிய பத்ததி,
ஆசீர்வாத விதி 25 ஆவது.

"வேதம் ஓதல், திருமுறை ஓதல், நிருத்த கீத வாத்தியங்கள் நிகழ்த்தல், சுவாமியை வலம்வரல், நமஸ்கரித்தல், ஆசீர்வாதஞ் சொல்லுதல், விபூதி கொடுத்தல், ஜபநிவேதனம் பண்ணுதல் என்னும் இந்த உபசாரங்களோடு முடிவுறுவதாகிய உபசார பாரம்பரிய சித்தியானது ஆகட்டும் என்று மஹான்களாயுள்ளவர்கள் அநுக்கிரகிப்பார்களாக" — என்பது தமிழில் இதன் விளக்கமாகும்.

தமிழ் வேத பாராயணம் என்ற அம்சம் தோத்திர பூஜையில் வேதத்தை அடுத்தும் ஆசீர்வாதத்துக்கு முன்னும் இடம் பெற வேண்டும் என ஆசீர்வாத வசனமே கூறுதலை இங்குக் காண்கின்றோம்,

ஆசீர்வாதம் என்பது மேற்குறித்த பூசையம்சங்கள் ஏழுக்கும் வேறாக ஆகக் கடைசியாக நிகழ்தற்குரியதொன்று. அதற்குத் தோத்திரங்களுக்குரிய அந்தஸ்தில்லை. நடைபெற்று முடிந்த பூஜையின் விளைவாகப் பொதுவில் உலகனைத்துக்கும் விசேடமாகப் பூஜையில் சம்பந்தப்பட்ட எஜமான் முதலியோர்க்கும் இகபரப் பேறுகளாகிய நற்பலன் விளைவதற்குத் திருவருட்காட்சியாளர்களாகிய மஹான்கள் அநுக்கிரகிக்க வேண்டுமென வேண்டிக் கொள்ளும் ஒரு விருப்ப வெளியீடு அல்லது ஒரு பொதுப் பிரார்த்தனை அதுவாகும். பூஜையம்சங்களில் தற்செயலாக ஏற்பட்டுவிடக் கூடிய தவிர்க்க முடியாத குற்றங்கள் நிறைவானவைகள் ஆம்படி மஹான்கள் அநுக்கிரகிப்பார்களாக என்ற வேண்டுதலும் ஆசீர்வாதத்தில் முக்கியமாக இடம் பெறுதலையும் அவதானிக்க வேண்டும்.

அங்ஙனமாகவும் வேதாத்யயனம் முடிந்ததும் ஆசீர்வாதஞ் சொல்லி அதன் பின்பே திருமுறை ஓதவிடப்படும் வழக்கமும் ஈழத்துப் பல ஆலயங்களில் இடை வழக்காகப் புகுந்திருத்தல் கண்கூடு. இந்நிலைமை சிவாகம விதி மீறல் மட்டிலன்றி ஆசீர்வாத விதி மீறலாகவும் போயிருத்தல் மேற்காட்டிய ஆகம வசனங்களால் இனிது புலனாகும். அன்றியும் பதிவாக்கு என்ற முறையில் வேதத்துக்கும் திருமுறைக்குமிடையில் அமைந்துள்ள அந்தரங்க இணைப்பைப் பேதித்துத் திருமுறைகளின் புண்ணிய புனிதப் பொலிவை மாசுபடுத்துவதுமாகும். சமயாசாத்யர்களையே ஒப்பாரும் மிக்காருமில்லாத சமய தலைவர்களாகவும் அவர்களின் அருள்வாக்குக்களாகிய திருமுறைகளையே சிவத்துள் பரிமளிப்பில் சிவாகமங்களிலும் இன்றியமையாத புண்ணியப் புனித நூல்களாகவும் நம்பி வாழும் தமிழ்ச் சைவ உலகில் சிவாகமம், திருமுறை ஆகிய இரண்டினையும் சீர்கெடுக்கும் இந்நிலைமை சீர்திருத்த வேண்டுதல் அத்தியாவசியம் என்பது சொல்லாமல் தானே அமையும்.

இன்னும் இத்திருமுறை ஓதுதல் எவரால் நிகழின் அது சிவப்பிரீதியாகி உரிய பலன் விளைக்கும் என்பதையும் மேற்காட்டிய அச்சிறுபாக்கத் தேவாரப் பகுதியிலேயே அவதானிக்கலாம். "தம்மலரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச் சொலும் வடசொலுந் தாணிழற் சேர" என்பதனால் உயர்தர சிவபாவனையில் உள்ள ஒருவரே அது செய்யத் தகும் என்பதும் புலனாகின்றது. பூதசுத்தி, அந்தர்யாகம், புண்யாகவாசனம் எல்லாம் முடித்து நிரம்பிய அகப்புறச் சுத்தியுடன் சிவபாவனை வசத்தராய்ப் பூஜைக் கிரியைக்குத் தாமே சங்கற்பித்துக்கொண்டு முன்னிற்பவர் என்ற முறையில் பூசகராய சிவாசாரியரே அதைச் செய்தல் சாலவும் சிறந்ததேயாகும். பூஜையம்சங்கள் அனைத்தும் ஒரே கையால் முடிவுறுதலாகிய ஒரு பெரு நிறைவுத் தன்மையும் அதில் வாய்ப்பதாகும். வேதாத்யயனம் பண்ணுந் திருவாயாலேயே திருமுறை ஓதுதலும் நிகழப் பார்க்கும் போதில் வேதமுந் திருமுறையுந் தரத்தாலும் தகுதியாலும் ஒன்றே என்ற உண்மை வழிபடுவோர் மனதில் வலுப்பெற்று விடுதலாகிய பெரும்பயனும் வாய்ப்பதாகும்.

இவ்வாறமையும் பூஜையில் காமிகவசனத்திற் கண்டபடி எல்லாவற்றையும் ஓதுதல் சாத்தியமாகாத போது வேதம் ஆகமம் திருமுறை என்ற மூன்றையும் ஓதுதலும் சிலவேளை வேதம் திருமுறை என்ற இரண்டையும் மட்டுமே ஓதுதலும் நடைமுறை வழக்கில் உள்ளன. அவ்விரண்டையும் மட்டுமே ஓதுமிடத்தும் வேதத்தின் நாலு பகுதிகளையும் திருமுறையின் பன்னிரு பகுதிகளையும் பிரதிநிதிக்கத் தக்கவாறு வகுத்து வகுத்து ஓதுதல் விரும்பத்தகும்.

பன்னிரு திருமுறையில் ஐந்தை மட்டும் தெரிந்து கொண்டு பஞ்சபுராணம் ஓதுதல் என்ற பெயரில் நிகழ்த்துதலும், அவசரார்த்தமாகத் தேவாரம். புரா

( 11 ஆம் பக்கம் பார்க்க )

மதம்மொழி காத்தோன் சிலையைக் காப்போம்

# சித்தும் பித்தும்: சைவத்தில் அதன் நிலை - 3

**ஈசத்துவம்** — ஆளுந் தன்மை பெறுதல். சதாசிவத் தன்மை பெறுதல் என்றுஞ் சொல்வர். இச்சித்து உள்ளார்க்கு நெற்றி நடுவில் சந்திர ஒளி விளக்கம் ஏற்படும் என்பர். இச் சித்துப் பெற்றோர் உடலுளங் குளிர்ந்து மோகவேகங் கெட்டு அமைதியுறுவர் என்கின்றது திருமந்திரம். இவர்கள் வேண்டுமேல் பிரபஞ்சத்தை ஆக்கி அழிக்கவும் வல்லர்.

**வசித்துவம்** — எல்லாவற்றையும் வசீகரிக்குந் தன்மையாகிய சித்து இது. இச்சித்துப் பெற்றவர்க்கு அவரின் சகஸ்ரதளத்தில் வாசனாரூபமாகத் தங்கியுள்ள தன்மாத்திரை ரூபமான ஒளிகள் புவனங்களாய் விரியும். அவர் தன்னளவிலிருந்தவாறே சகல புவன சஞ்சாரமும் பெறுதல் கூடும்.

**பிராப்தி** — அருட்சித்தியைப் பெறுதல். பராசத்தியின் இருப்பை அறிந்து அதனுடன் கூடுதலால் இந்நிலை கைவரும் என்பர். இவ்வகைச் சித்து நிகழப் பெறுவோர் வேண்டுவன எல்லாம் தாமிருந்த இடத்திருந்த கிடைக்கப் பெறுவர்.

**பரகாயப் பிரவேசம்** — ஆத்மா தானிருந்த உடலை விட்டுக் கிளம்பி மற்றோருடலிற் புகுதலும் மீண்டும் தன் முன்னையுடலிற் புகுதலுமாகிய சித்து. திருமந்திர நூல் இதனையே முதலாவது சித்தாக நிறுத்தி விபரித்தல் காணலாம். திருமூலர் வரலாறே இச்சித்தின் உண்மைக்கு அகச் சான்றாகும். அவர் கயிலையிலிருந்து புறப்பட்டு அகஸ்தியரைக் காணத் தென்னாடு நோக்கி வருகையில் திருவாவடுதுறையிலே உயிர் நீத்துக் கிடந்த மூலன் என்னும் இடையன் உடலிற் புகுந்து உயிர்த்தெழுந்து அவன் பிரிவால் வருந்திக் கொண்டிருந்த பசுக்களுக்கிதஞ் செய்தார். ஆனால், திரும்ப, தனது முன்னைய உடலிற் புகமுடியாமல் திருவருளால் தடை விதிக்கப்பட்டார், திருவருள் அவர் முன்னைய உடலை மறையச் செய்து விட்டதாகச் சரித்திரம். சித்து நிகழ்ச்சிக் கிடமாயிருப்போரும் சுதந்தர புருஷரல்லர். முற்ற முடியத் திருவருளின் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் என்ற உண்மைக்கு இது தரமான எடுத்துக் காட்டாகும். மேலும் இவ்வட்டமா சித்திகளின் பேருவதெல்லாம் சிவப்பேறே. அப்பகுதியில் திருமூலர் கூறும் பின்வருங் கூற்றுக்கள் குறிப்பிடத்தகும்.

'பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே'
'சித்திகள் எண்சித்தி தானுந் திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே'
'கான விளக்கொளி கண்டுகொள் வார்கட்கு
மேலை விளக்கொளி வீடெளி தாகின்றே'
'நட்டறி வார்க்கு நமனில்லைத் தானே'

அன்றியும் இவ்வகையில் வாய்க்கும் சித்துக்களால் இவற்றிற் சம்பந்தப்பட்டவர்கள் லௌகிகார்த்தமாகப் பெற்றுக் கொள்வது எதுவுமில்லை. ஆயினும் லோக க்ஷேமத்தின் பொருட்டு நிகழும் திருவருட் குறிப்பினால் சாமானிய வாழ்விலுள்ளார் இவற்றின் மூலம் தங்குறை நிறைகள் நீங்கப் பெறுதல் உண்டு. கடையிற் சுவாமிகளிடத்தில் நிகழ்ந்த இரும்பு பொன்னாதல் சித்தினாற் சில குடும்பஸ்தர் வறுமை நீங்கிச் செழிப்புற்ற செய்தி நம்மி யாழ்ப்பாணத்திலேயே வெகுவாகக் கேட்கப் பெறும்.

திருமூலர் வாயிலாகக் கேட்கப்பெறும் மேற்போந்த சித்துக்கள் அட்டாங்க யோகப் பேறாக நிகழ்பவை, திருமூலர் போலத் தீவிரதரபக்குவமும் தீர்ந்த பார்வையும் வாய்க்கப் பெற்றவர்களுக்கல்லாது எல்லோர்க்கும் இத்தகைய சித்துப் பேறுகள் வீட்டு நெறியையும் சிவப்பேற்றையும் அனுபவிக்கக் கூடியனவாயிருதல் சாலாது. தாயுமானசுவாமிகள் பாடியுள்ள 'கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம் ...... கட்செவி யெடுத்தாட்டலாம் ...... ...... ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் ... ... சலமேல் நடக்கலாம் ...... தன்னிகரில் சித்தி பெறலாம் ......' என்ற செய்யுளைப் பார்க்கும் போது இவ்வாறு எண்ணத் தோன்றுகிறது. இவையெல்லாம் செய்யலாம். ஆனால், "சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது" எனச் சுவாமிகள் தெளிவாகவே உணர்த்தியுள்ளனர். சில வேளை இச்சித்துகள் நிகழப் பெறுவோர் அவற்றில் நான், எனது உணர்வுகளைக் கலக்கவிட்டுத் தம்பொருட்டோ அல்லது தம்மைச் சார்ந்தார் பொருட்டோ இவற்றை இஷ்டசித்திப் பேறாகக் கொண்டு துஷ்பிரயோகம் பண்ணியிருப்பதாகவும் பெரியோர் சொல்லக் கேட்டுள்ளோம்.

அதைமுன்னிட்டு முன்னெச்சரிக்கையாகவே, சித்துவிளையும் பக்குவமுள்ள சீடரொருவர் விஷயத்தில் அவரது குரு மிகக் கண்டிப்பாக இருப்பதும் உண்டெனத் தெரிகிறது. சிவயோகசுவமிகளின் அருளிச் செயலாய நற்சிந்தனையில், 'ஞானகுரவன்' என்ற தலைப்பில் வரும் " இட்டசித்திக ளெய்தவும் விட்டிலன் ... இட்டமாக்கின ரென்ன வியப்பிதே" என்ற பகுதி இத்தொடர்பில் சிந்தித்துணரத்தகும்.

( வளரும் )

ஐந்தாங் குரவர் சிலையை மீட்போம்

# நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையத்தின்

# சைவ, தமிழ் எழுச்சி மகாநாடு

நாவலர் பெருமான் அறங்காவற் குழுவின் ஆதரவோடு அண்மையில் அமைக்கப்பட்ட நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் எதிர் வரும் புரட்டாதி மாதத்தில் சைவ மகாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. யாழ். கல்விப் பணிப் பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அறங்காவற் குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற் கொள்ளப்பட்டது.

இம் மகாநாடு மூன்று நாட்கள் நடைபெறும்; முதலாம் நாள் மகாநாடு நாவலர் பெருமான் அரங்கில் அறிஞர் மகாநாடாகவும், இரண்டாம் நாள் மகாநாடு சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் அரங்கில் மங்கையர் மகாநாடாகவும், மூன்றும் நாள் மகாநாடு பண்டிதமணி கணபதிப்பிள்ளை அரங்கில் மாணவர் மகாநாடாகவும் நடைபெறும். முதலாம் நாள் மகாநாடு திருமுறை ஊர்வலத்துடனும் பண்ணிசை ஓதுதலுடனும் ஆரம்பமாகும்; மூன்று நாட்களிலும் பிற்பகல் வேளைகளில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் நடத்தவிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான அறிமுக விழாவாகவும் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளில் மக்களுக்கு ஆர்வமூட்டும் எழுச்சி விழாவாகவும் இம் மகாநாடு அமையும்

## நேயர் நெஞ்சம்

( 4ஆம் பக்கத் தொடர்ச்சி )

கள் பெரும் பான்மையினராக உள்ளனர். ஆர அமர இருந்து அறிவுப் பசிகொண்டுள்ளவர்களாக இருப்பவர்கள் கைவிரல் விட்டு எண்ணத்தக்கவர்கள் இவர்களுள்ளும், வேண்டாத விடயத்தில் ஏன் தலையைப் போட்டு உடைப்பான் என எண்ணுபவர்களும் உண்டு. ஆகவேதான் கிளர்ச்சி, போராட்டம் என்று முழங்கவேண்டியிருக்கிறது. இவ்வகையில் நாவலர் குரல் நல்லமுறையில் போராடி வெற்றிவாகை சூடும் என்பதில் யாவருக்கும் நம்பிக்கையுண்டு.

மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு அறவழி நின்று உண்மையை உள்ளபடி எடுத்து நாவலர் குரல் மூலம் அறிமுகப்படுத்திய

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர்சபை

கீரிமலை சிவ நெறிக்கழகம்

யாழ். பல்கலைக்கழக இந்துமன்றம்

இவைகளுக்கும் இதுவரை தங்கள் ஒரு மித்த எதிர்ப்புக் குரலை எழுப்பியவர்கட்கும் சிலையை அகற்றிய நாவலர் சபையின் ஆட்சிக் குழுவிலிருந்து விலகிய பண்டிதை அம்மாவுக்கும் இன்னும் இக்கருத்துக்களைத் தங்கள் மனத்தகத்தே அழுத்தமாக வைத்துள்ள சைவ அன்பர்களுக்கும் நாவலர் குரல் மூலம் நன்றி கூறவேண்டும்.

தமிழ் மணக்க, சைவம் தழைக்க, தரணியில் தன் மானத்துடன் தமிழர்களாகிய நாம் வாழ வழி செய்துதந்த நல்லை நகர் நாவலர் பெருமானே! நல்லூர்க் கந்தனுடைய தென்புற வாயிலுக்கருகமைந்த மணிமண்டபத்துக்கு எழுந்தருளாயோ!

ம. சி. சிதம்பரப்பிள்ளை

## சிவாலய பூஜையில் தமிழ்

( 9 ஆம் பக்கத் தொடர்ச்சி )

ணம் என்ற இரண்டுடன் முடித்தலும் ஏதோ தற்காலிக வழக்குகள் என்றே கொள்ளற்பாலனவாம்.

திருமுறைகளில் ததும்பும் சிவத்துவ வியாபகப் பெருமையைப் பெரிதுணர்ந்து சோழப் பெருமக்கள் காலத்திலே பூஜையில் திருமுறை ஓதும் மரபு வலுப் பெற்றதாக அறியப்பட்டு வருகின்றது. திருமுறை ஓதுவார்க்குப் பண்ணிசைத் தகுதி பெரிதும் வேண்டுமென்பதனுல், சோழ மன்னர்கள் தனித்தனி நிபந்தமமைத்து ஓதுவார் என்ற ஒரு பகுதியினரை உருவாக்கி வைத்தமை சிலாசாசனங்களால் தெரிய வருகின்றது. அந்தப் பாரம்பரியத்தைச் சார்ந்தோர் தற்பொழுதுங் கூடத் தமிழ் நாட்டுச் சிவாலயங்களைச் சார்ந்திருத்தலைக் காணலாகும்:

ஈழத்துப் பெருந்தலமாகிய திருக்கேதீச்சரத்தில் வேதத்தையடுத்து இடையீடின்றித் திருமுறை ஓதும் ஒழுங்கு எப்போதும் நடைமுறையில் இருந்து வருகின்றது. ஈழத்துச் சைவாலயங்கள் திருக்கேதீச்சர நடைமுறையைப் பின்பற்றுதல் அவற்றுக்குப்பெருமையாகும்.

இவ்வருமை பெருமைகளை நன்குணர்ந்து பக்தி விநய பூர்வமான சீரிய முறையில் பூசையில் திருமுறைகள் இடம்பெறும் வழக்கம் மேன்மேல் மிகுவதாக. —(18-1-82 இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.வானொலியார்க்கு நன்றியுடன் வெளியிடப்படுகிறது.)

**சைவர் தமிழர் சால்பைக் காப்போம்**

## நாவலர் சிலையை மீட்க

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

**பண்டிதமணி** சி. கணபதிப்பிள்ளை என்ற நாவலர் மரபின் தவக்கொழுந்து, நாவலர் சபையின் நிறுவக உறுப்பினரான அறிஞர் ச, அம்பிகைபாகன், பல்கலைக் கழக அறிஞர்களான கலாநிதி சி. க. சிற்றம்பலம், பேராசிரியர் பொ. பூலோகசிங்கம், முதுமாணி இரா. வை. கனகரத்தினம், கலாநிதி சி, க. சிற்றம்பலம், நாவலர் சபைத் துணைத்தலைவர், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் திருமதி இராசலட்சுமி கைலாசநாதன், மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள், நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மகாசந்நிதானம் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகிய அனைவரும் ஒரே குரலில்—உரத்த குரலில்—நாவலர் திருப்படிமம் கடத்தப்பட்டதை எதிர்த்துக் கருத்து வெளியிட்டுள்ளதோடு, சிலை மீளவேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்துள்ளனர், இவர்களுடைய குரலை நாவலர் சபை உதாசீனம் செய்தது—செய்வது—சைவத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதையும் அவமதிப்பது போலாகும்,

ஊர்தோறும் அமைந்துள்ள சமய இயக்கங்கள், சபைகள், சங்கங்கள், மன்றங்கள் நாவலர்சபை மேற்கொண்ட சிலைகடத்தலைக் கண்டித்நதோடு சிலை மீள வேண்டும் என்றும் கோரியுள்ளன. நாவலர் சபையே கடத்தியதைக் கொண்டுவந்து மீள வைக்க வேண்டுமென்று தர்மத்தின் அடிப்படையில் குரல் கொடுத்துள்ளன, நாவலர்சபை இத்தகை குரல்களுக்கும் மதிப்பளிக்காத நிலையில் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்திலிருந்து செயற்படும் சிவநெறிக் கழகமும் யாழ். பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றமும் சைவத் தமிழ் உலகின் சார்பில் நேரடி நடவடிக்கை— அறப்போர்—நிகழ்த்தி சிலையை மீட்க நேரிடும் என எச்சரிக்கை செய்துள்ளன.

நாவலர்சபை, பல்கலைக்கழக மாணவரின்—சிறப்பாக இளைஞரின் மனோநிலையையும்—செயல் ஆற்றலையும் உணர மறுத்துவருகிறது. இது தீயுடன் விளையாடுவதை ஒத்தது என்பதை அவர்கள் உணர மறுப்பது நல்லதல்ல.

இன்று இளைஞர்கள் இன விடுதலைப்போரில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சக்தி தவறாக வழி நடத்தப்பட்ட ஓரிரு நபர்களுக்கெதிரான போராட்டத்தில் விரயமாகிவிடக்கூடாது'

பேராசிரியர் துணைவேந்தர் சு. வித்தியானந்தன். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வகித்திருந்த நாவலர்சபைத் துணைத் தலைவர் பதவியை இன்று பேராசிரியர் அ, சண்முகதாஸ் அவர்கள் வகித்து வருகிறார்கள். அவருடைய வருகை இருள் சூழ்ந்த நாவலர் சபையில் ஒளி வீசும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. அவர்களிடம் பெரிய பொறுப்பு இப்போது சேர்ந்துள்ளது. பட்டியிலிருந்து பிரிந்த இளம்மறிகளை மீட்டும் பட்டிக்குக் கொண்டு வந்து நாவலர் பெருமான் சிலையை மணி மண்டபத்திற்கு மீட்டுவரும் வாய்ப்பு முருகன் அருளாலும் நாவலர் பெருமான் திருநோக்காலும் பேராசிரியர் சண்முகதாசுக்குக் கிடைத்துள்ளது. அவர் சிலையை மீளக் கொண்டுவரும் முடிவை நாவலர் சபை மேற்கொள்ள வழிவகுத்து, நாவலர் சபையினரை பாவச் சேற்றிலிருந்து மீட்பார் என நம்புகிறோம்.

. சிலை கடத்திய ஓராண்டு நிறைவும் நல்லை முருகன் ஆட்டைப் பெருவிழாவும் விரைவில் வரவுள்ளன. இக்காலத்தில், சிலை கடத்தலுக்கு ஒரு மனதாக — முழு நிறைவாக — எதிர்ப்புத் தெரிவித்து வரும் மக்களை அவமதிக்கும் வகையில் சிலைகடத்திய ஆண்டு நிறைவு விழாவை நாவலர் பண்பாட்டு மண்டபத்தில் கொண்டாட நாவலர் சபை முயன்று வருவதாகத் தெரிய வந்துள்ளது. பொருட்காட்சி, கலை விழா முதலிய நிகழ்ச்சிகளை நடத்தி மக்களைக் கூட்டி மக்களின் இயலாமையை மக்களுக்கே சுட்டிக் காட்டி மக்களை அவமதிக்க நாவலர் சபை பெரிய எடுப்பில் திட்டமிடுகிறது. சைவத் தமிழரை அவமதிக்கும் இப்பாரிய திட்டத்துக்கான கால்கோள் விழா நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் 12 - 7 - 86 ஆம் நாள் சிலை வடிப்பு அங்குரார்ப்பண விழாவாக நடைபெறுகிறது.

> சைவத் தமிழா உன்தலைவனையும் உன்னையும் ஒருசேர அவமதிக்கும் பழிவளர்க்கும் செவிலிகளுக்கு நீ துணைபோகப் போகிறாயா ? அல்லது சிலையை மீட்டு உன்பண்பாடு காக்கப் போகிறாயா ? சிந்தி. செயற்படு. தூங்காதே. விழி. எழு, போராடு.

---

## வள்ளற் பெருமக்களே,

### நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்

என நாவலர் சபையார் உங்களிடம் வருவர் அப்போது "மதி குறைந்து நீர் போக்கிய சிலையை மீண்டும் உரிய இடத்தில் வைத்துவிட்டு வாருங்கள் உங்கள் பணிகளுக்குக் கோடி கோடியாய்க் கொட்டிக் குவிக்கிறோம்" என்று அவர்களைத் திருப்பி அனுப்புங்கள்.

---

இவ்விதழ் யாழ்ப்பாணம், 411/1, காங்கேசன்துறை வீதியில் இருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத்தினரால், யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகத்தில் 1986 - 07 - 01 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

**சிலையை மீட்போம் பழியைத் துடைப்போம்**